පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය
பொலிஸ் ஊடகப் பிரிவு
POLICE MEDIA DIVISION
14 ஆம் மாடி, சுகுறுபாய,

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දිනය திகதி Date | 07.03.2026 நேரம் 1710 மணி | දුරකථන தொலைபேசி Telephone | 011-2887973 | මගේ අංකය எனது இலக்கம் My No | D/Media/out/405/2026 | ඊ මේල් மின்னஞ்சல் E-mail | dir.media@police.gov.lk |

**"துணிச்சலான உலகை வெல்லும் பெண்களுக்கு எங்களது மரியாதைக்குறிய வணக்கம்"**

## சர்வதேச மகளீர் தினம் – 08.03.2026

உலகத்தை வாழ வைத்திட உழைக்கும், அமைதியாக ஆயிரம் தியாகங்களைச் செய்யும் தாய், சகோதரி, மனைவி மற்றும் மகளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட நாளாக இந் நாள் அமைந்துள்ளது. பெண் என்பவள் ஒரு குடும்பத்தின் நிழல் மட்டுமல்ல; ஒரு நாட்டின் பொருளாதாரத்துக்கும் எதிர்காலத்திற்கும் வலுவான அடித்தளமாக விளங்குபவளும் ஆவாள்.

ஒவ்வொறு வருடமும் மார்ச் 8 ஆம் திகதி உலகெங்கிலும் உள்ள பெண்களின் ஒப்பற்ற பங்களிப்பை பாராட்டவும், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை உலக கவனத்திற்கு கொண்டு வரவும் இந் நாள் கொண்டாடப்படுகிறது. இந் நாள் ஒரு சாதாரண நாளாக மட்டுமல்ல; மனித வரலாற்றில் பெண்கள் மேற்கொண்ட போராட்டங்களையும் பெற்ற வெற்றிகளையும் பிரதிபலிக்கும் ஒரு சின்னமாகவும் கருதப்படுகிறது.

1908 ஆம் ஆண்டு அமெரிக்காவின் நியூயார்க் நகரில் தொழிலாளர் பெண்கள் தங்களது உரிமைகளுக்காக நடத்திய போராட்டங்களிலிருந்து இந் நாளின் ஆரம்பம் உருவானது. பின்னர் டென்மார்க் நாட்டில் நடைபெற்ற மாநாட்டில் துணிச்சலான பெண்ணான க்ளாரா செட்கின் அவர்கள் உலகெங்கிலுமுள்ள பெண்களின் உரிமைகளுக்காக ஒரு நாளை ஒதுக்க வேண்டும் என முன்மொழிந்தார். அதன் அடிப்படையில் 1911 ஆம் ஆண்டு முதல் ஐரோப்பாவின் சில நாடுகளில் இந் நாள் கொண்டாடப்பட்டது. சர்வதேச மகளீர் தினம் கொண்டாடப்பட்டாலும், இலங்கையில் இது மேலும் பரவலாக அறியப்பட்டது 1975 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் மார்ச் 8 ஆந் திகதி உத்தியோகப்பூர்வமாக சர்வதேச மகளிர் தினமாக அறிவித்த பின்னரே ஆகும்.

சர்வதேச மகளிர் தினத்தில் பெண்களின் சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் சாதனைகள் பாராட்டப்படுகின்றன. இந் நாளை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் எங்கள் நாட்டிலும் தேசிய மட்டத்தில் முக்கிய நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டு, சமூகத்தின் பல துறைகளில் சிறந்து விளங்கும் பெண்கள் கௌரவிக்கப்படுகின்றனர்.

### இலங்கை பொலிஸ் மற்றும் பெண்களுக்கான பங்களிப்பு

இலங்கை பொலிஸ் வரலாற்றைப் பார்க்கும்போது, முதன்முதலாக பெண்களை பொலிஸ சேவையில் சேர்க்கப்பட்டது 1952 ஆம் ஆண்டு ஆகும். முதல் குழுவில் சில பெண்கள் உப பொலிஸ் பரிசோதகர்களும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்களும் இடம்பெற்றிருந்தனர். அதன் பின்னர் இன்று வரை இலங்கை பொலிசில் உயர்ந்த பதவிகள் வரை பெண்கள் முன்னேறியுள்ளனர்.

**பொலிசில் பெண்களுக்காக செயல்படுத்தும் சேவைகள்,**

- பெண்களின் உரிமைகளை பாதுகாக்கவும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் இலங்கை பொலிஸ் பல விசேட பிரிவுகளை நடத்துகிறது.
- சிறுவர் மற்றும் மகளீர் பணியகம்: பெரும்பாலான பொலிஸ் நிலையங்களில் இயங்கும் இப் பிரிவானது, பெண்களுக்கு எதிரான வன்முறைகள், குடும்ப வன்முறை மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்கிறது. இதன் ஊடாக பாதிக்கப்பட்ட பெண்கள் பாதுகாப்பாகவும் நம்பிக்கையுடனும் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்த வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.
- கிராம மட்டத்தில் பெண்களை விழிப்புணர்வூட்டும் திட்டங்களும் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சிகளும் பெண் பொலிஸ் அதிகாரிகளால் நடத்தப்படுகின்றன.

**பெண்களின் பாதுகாப்பிற்கான அவசர தொலைபேசி எண்கள்**

| **நிறுவனம்** | **அவசர அழைப்பு இலக்கம்** | **விளக்கம்** |
|---|---|---|
| இலங்கை பொலிஸ் (அவசர அழைப்பு) | 109 | சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளை செய்வதற்கு. |
| மகளீர் உதவி அழைப்பு **(Women's Help Line)** | 1938 | சிறுவர் மற்றும் பெண்கள் அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்படும் ஆலோசனைகள் மற்றும் சட்டவழிகாட்டல் சேவை |
| இலங்கை பொலிஸ் (அவசர அழைப்பு) | 119 / 118 | எந்தவொரு அவசர பாதுகாப்பு நடவடிக்கைக்காக |
| இலங்கை பொலிஸ் (அவசர அழைப்பு) | 107 | தமிழ் மொழியில் முறைப்பாடுகள் செய்வதற்காக பயன்படுத்தும் சேவை |

பெண்களுக்கு உரிய மரியாதையும் பாதுகாப்பையும் வருடத்தின் 365 நாட்களும் உறுதிப்படுத்தி உலகத்தை அழகாக்கி, வாழ்க்கைக்கு அர்த்தம் தரும் உலகெங்கிலும் வாழும் அனைத்து தாய்மார்கள், சகோதரிகள் மற்றும் குழந்தைகளுக்கு எங்கள் இதயம் கனிந்த வணக்கத்தையும் பாராட்டையும் இத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**பொலிஸ் ஊடகப் பிரிவு**